மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு வரக்கூடிய கோரிக்கைகளை மத்திய அரசுக்கு பரிந்துரை செய்திருக்கிறது. அதற்கு முடிவு எடுக்க வேண்டியது, மத்திய அரசு. மத்திய அரசு விரைவில் முடிவு எடுக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மத்திய அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கை. திரும்பத் திரும்பக் கேட்டாலும் அதுதான். இங்கிருந்து மத்திய அரசுக்கு அனுப்பலாம்.

வினா எண் 260, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

260—

நரிக்குறவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்.

★ 20235—டாக்டர் பெ. வீரபாண்டியன் :

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நரிக்குறவர்கள் நிலையான வாழ்க்கை நடத்தி பொருளாதாரத்தில் முன்னேற அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இவர்களுக்கு மானிய விலையில் துப்பாக்கி, தோட்டா, ரவை (Balls) ஆகியவை வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நரிக்குறவர்களுக்கு இத்துறை மூலம் 3 சென்ட் வீட்டுமனை இலவசமாக வழங்கப்படுகிறது. அவ்வாறு இலவசமாக வீட்டுமனை பெற்றுள்ளவர்களுக்கு அரசு செலவில் தொகுப்பு வீடுகளும் கட்டப்பட்டு வருகிறது. இச்சிறப்புச் சலுகை தவிர இத்துறையால் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்களுக்கு வழங்கப்பட்டு வரும் அனைத்து சலுகைகளும் இவர்களுக்கும் அளிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) நரிக்குறவர்களுக்கு மானிய விலையில் துப்பாக்கி, தோட்டா, ரவை ஆகியவை வழங்கும் செயற்குறிப்பு ஏதும் இத்துறையின் பரிசீலனையில் இல்லை.

1994 ஏப்ரல் 11]

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடோடிகளாக சுற்றித் திரியும் நரிக்குறவர்கள் இன்றைக்கு நாகரிகமான வாழ்க்கை வாழ்கின்ற முறையில் சுயதொழிலாக மணி கட்டுதல், மலைகளில் கிடைக்கும் மருந்து மூலிகைகளை சேகரித்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டு வருகின்றார்கள். அவர்களுடைய வாழ்வு மலர, வாழ்க்கைத் தரம் மேம்பாடு அடைய, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி, அவர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகளையும் மற்றும் இலவசமாக பட்டா கொடுப்பதையும் நான் மனதார வரவேற்கிறேன். மேலும், இந்தத் துறையில் அவர்களுக்கு எத்தனை திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன என்பதைக் கேட்க விழைகிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18-9-1991 அன்று சட்டப் பேரவையில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மானியக் கோரிக்கை எண் 32—இன் மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதில் அளித்துப் பேசும்போது நரிக்குறவர் நாடோடி வாழ்க்கையைக் கைவிட்டு நிலையாக ஒரே இடத்தில் வாழ முன்வருவார்கள் எனில் அவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டித்தரப்படும் என அறிவித்துள்ளார்கள். அந்த அறிவிப்பின் அடிப்படையிலே நடப்பாண்டில் ரூ. 30 லட்சத்து 90 ஆயிரம் செலவில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திலே உள்ள பையூர் பிள்ளைவாயல் கிராமத்தில் 150 நரிக்குறவர்கள் பயன்பெறும் வகையில் 150 வீடுகள், ஒவ்வொரு வீடும் ரூ. 20,600 மதிப்பில் கட்டித் தருவதற்கு உத்தரவிட்டுள்ளார்கள். அது மட்டுமல்ல, நரிக்குறவர்கள் மிகப் பிற்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆக வருவதன் காரணமாக பிற்பட்டோர் நலத்துறையின் மூலமாக தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக குறைந்த வட்டியிலே அவர்களுக்கு கடன் வழங்கப்படுகிறது. அதையும் கூட அவர்கள் பயன்படுத்திக்கொண்டு தங்கள் வாழ்க்கைத் தரத்தையும் பொருளாதாரத்தையும் உயர்த்திக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்காலத்தில் தான் ஏழைமக்கள், அடிமட்டத்தில் இருக்கும் மக்கள் முன்னேறிக் கொண்டு வருகிறார்கள் என்பதை உணர்ந்து கொண்டிருக்கிறோம். நரிக் குறவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய், ஒரு லட்சம்

ரூபாய் என்று லோன் கொடுப்பதாக இருந்தால் அவர்களுக்கு ஜாமீன் ஒருவர் வேண்டுமென்று கேட்பதில் தவறு இல்லை. ஆனால் அவர்களுக்கு சுயதொழில் தொடங்க 5 ஆயிரம், 10 ஆயிரம் என்றுதான் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். எனவே ஜாமீன் இல்லாமல் அவர்களுக்கு லோன் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மேலும் நரிக்குறவர்கள் சுயதொழில் துவங்க எல்லா மாவட்டங்களும் பயன்படத்தக்க வகையில் இந்தத் திட்டத்தை அரசு விஸ்தரித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோருக்கு கடன் வழங்குகிற திட்டம் தமிழகம் முழுவதும் தான் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 5 ஆயிரம் ரூபாய் 10 ஆயிரம் ரூபாய் கடனுக்கு பிணையத் தொகை கட்டத் தேவையிருக்கக்கூடாது என்ற கருத்தைச் சொன்னார்கள். 6 சதவிகிதம் வட்டி என்று பார்க்கும்போது நூறு ரூபாய்க்கு 50 காசு அல்லது 60 காசு வட்டிதான் வருகிறது. எனவே இதற்காகத்தான் பிணையத் தொகை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. எனினும் 10 ஆயிரம் இல்லையென்றால் 5 ஆயிரம் ரூபாய் கடன் கோருபவர்களுக்கு குறைந்த வட்டியிலே அவர்களுக்குக் கொடுப்பதால் அவர்களுக்கு எந்தவித ஜாமீனும் இல்லாமல் கடன் கொடுக்க பரிசீலனை செய்யமுடியுமா என்பது குறித்து விரைந்து இந்த அரசு முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பேரளூர் வரதன்.

திரு. பேரளூர் வரதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நேரு ஸ்டேடியத்தை அமைப்பதற்கு முன்னால் அங்கேயிருந்த நரிக்குறவர்கள் எல்லாம் அகற்றப்பட்டபோது தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அவர்களுக்கு உரிய இடம் கொடுத்து மறுவாழ்வு அளிக்கப்படும் என்று சொன்னார்கள். அதன் அடிப்படையில் என்னுடைய தொகுதியிலே பெண்ணலூர் கிராமத்திலே அவர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் ஒதுக்கப்பட்டன. அதனை பல நிறுவனங்கள் மூலமாக வீடுகள் கட்டி இரண்டு தினங்களுக்கு முன்னாலே அவர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டன. அரசின் உதவியோடு ரூ. 3,000 வங்கிக் கடன் வழங்கபபட்டு, ஊசிமணி போன்ற பொருட்கள் வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நரிக்குறவர்கள் கலாச்சாரம் இல்லாதவர், அறிவுத்திறன் இல்லாமலும், படிப்பறிவு இல்லாமலும் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் முன்னேறுவதற்கு அரசு தரிசாக இருக்கின்ற நிலங்களை ஆர்ஜிதம் செய்து அவர்களுக்கு 2 ஏக்கர் நிலம் வழங்கி

அதிலே பயிர் செய்வதற்கு பம்ப் செட்டு அமைத்துக் கொடுத்து, அவர்களுக்குப் புதிய ஜீவாதாரண அடிப்படையிலே விவசாயம் செய்யவும் மாற்றுத் திட்டங்களை அரசு ஏதேனும் திட்டத்தின் மூலம் கொண்டு வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தக் கருத்து குறித்து அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் ஆகியோருடைய வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்பட்ட அவர்களது துறை சம்பந்தப்பட்ட வினாக்கள், இப்போது எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

*வினா எண் **244**, திரு. எஸ். ஆசைமணி*: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

244—

மன்னார்குடியிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து வழித்தடத்தை மாற்றி இயக்குதல்.

** **21606**—திரு. எஸ். ஆசைமணி* :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், மன்னார்குடியில் இருந்து சென்னை செல்லும் தடம் எண் 331, திருவள்ளுவர் அரசு விரைவுப் பேருந்தை மன்னார்குடி, கூத்தாநல்லூர், கொரடாச்சேரி, குடவாசல், நாச்சியார்கோயில், கும்பகோணம் வழியாக இயக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தடம் எண் 331 என்று திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து எதுவும் மன்னார்குடியிலிருந்து சென்னைக்கு இயக்கப்படவில்லை. அக்கழகத்தின் தடம் 339 எண் கொண்ட பேருந்து மன்னார்குடியிலிருந்து சென்னைக்கு கூத்தாநல்லூர், கொரடாச்சேரி, குடவாசல், நாச்சியார்கோயில், கும்பகோணம் வழியாக இயக்கப்பட்டு வருகிறது.